**திருநெல்வேலி மாவட்டத்தில் 40796 ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 194 கிலோ தங்கம் மற்றும் ரூ.144.86 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.**
**தாலிக்கு தங்கம் வழங்கி ஏழைப் பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறோம்.**
**திருநெல்வேலியில் திருமண உதவித் திட்டத்தில் பயன் பெற்றோர் மகிழ்ச்சி.**
**----------**

தமிழக அரசு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக கருதி அதற்கான திட்டங்களை தீட்டவும், மக்களின் வாழ்வு வளம் பெறவும், அவர்களின் நலன் பேணி பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இது மக்களின் அரசு மக்களுக்காக பல்வேறு கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து விரைந்து செயல்படும் அரசு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் வழியில் வந்த அம்மா அரசு. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட ஏராளமான நலத்திட்டங்களை வழங்கி வருகிறது.

சாதாரண ஏழை, எளிய மகளிரை மேம்படுத்திட இலவசமாக கறவை மாடு, ஆடு வழங்கும் திட்டம், பணிக்கு செல்லும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா ஸ்கூட்டர் வழங்கும் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மகளிர்களுக்காகவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு தங்கம், திருமண உதவித் தொகை வழங்கும் திட்டமாகும். திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தினை கொண்டு வந்த புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பின்பு அதனை 8 கிராம் ஆக உயர்த்தி வழங்கப்படும் எனவும், பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு திருமண உதவித் தொகை ரூ.50,000/– நிதியும், பட்டயபடிப்பு இல்லாதவர்களுக்கு திருமண உதவித் தொகை ரூ.25,000/– நிதியும் வழங்கப்படும் என அறிவித்தார்கள். இத்திட்டத்தினால் ஏழைப் பெண்களின் படிப்பு இடைநிற்றல் இன்றி உயர்கல்வி வரை பயில உயர்ந்தது.



திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், ஈ.வே.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் என பல திருமண நிதியுதவித் திட்டங்கள் உள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.




திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2011–2012ம் நிதியாண்டில் பட்டப்படிப்பு முடித்த 1180 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.5.8 கோடியும், பட்டப்படிப்பு இல்லாத 2942 நபர்களுக்கு தலா4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை என ரூ.7.35 கோடியும், 2012–2013ம் நிதியாண்டில் பட்டப்படிப்பு முடித்த 1805 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.9.25 கோடியும், பட்டப்படிப்பு இல்லாத 4475 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை என ரூ.11.19 கோடியும், 2013–2014ம் நிதியாண்டில் பட்டப்படிப்பு முடித்த 1699 நபர்களுக்கு தலா4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.8.49 கோடியும், பட்டப்படிப்பு இல்லாத 1811 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை என ரூ.7.02 கோடியும், 2014–2015ம் நிதியாண்டில் பட்டப்படிப்பு முடித்த 2407 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.8.94 கோடியும், பட்டப்படிப்பு இல்லாத 3578 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை என ரூ.12.03 கோடியும், 2015–2016ம் நிதியாண்டில் பட்டப்படிப்பு முடித்த 934 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.4.67 கோடியும், பட்டப்படிப்பு இல்லாத 4259 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை என ரூ.10.65 கோடியும், 2016–2017ம் நிதியாண்டில் பட்டப்படிப்பு முடித்த 4075 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.20.37 கோடியும், பட்டப்படிப்பு இல்லாத 3926 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை என ரூ.9.81 கோடியும், 2017–2018ம் நிதியாண்டில் பட்டப்படிப்பு முடித்த 3612 நபர்களுக்கு தலா 8 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.18.06 கோடியும், பட்டப்படிப்பு இல்லாத 4093 நபர்களுக்கு தலா 8 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை என ரூ.10.23 கோடியும் ஆக மொத்தம் 2011 முதல் 2018 நிதியாண்டு வரை 33091 பயனாளிகளுக்கு 4 கிராம் தங்கமும், 7705 பயனாளிகளுக்கு 8 கிராம் தங்கமும் என மொத்தம் 40,796 நபர்களுக்கு 194 கிலோ தங்கம் மற்றும் ரூ.143.86 கோடி திருமண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.



திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் 29.03.2018 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பட்டயபடிப்பு முடித்த 42 பெண்களுக்கும், பட்டயபடிப்பு இல்லாத 73 பெண்களுக்கும் என மொத்தம் 115 பெண்களுக்கு ரூ.39.25 லட்சம் திருமண உதவித் தொகைகளையும், தலா 8 கிராம் வீதம் 920 கிராம் தாலிக்கு தங்கத்தினையும் வழங்கினார்.



எனது பெயர் திருமதி.ஜெயகுரு, எனது கணவர் பெயர் திரு.குருசாமி. காய்கறி கடை வைத்துள்ளார். நாங்கள் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறோம். எங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.200/–க்குள் தான் வருமானம் கிடைக்கிறது. அரசு படிப்பிற்காக பல உதவிகளை செய்ததால் எங்கள் மகள் சீத்தாவை எம்.எஸ்.சி. வரை படிக்க வைத்தோம். திருமணம் எப்படி நடத்துவது என சிரமப்பட்ட நேரத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருமணத்திற்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் மனு கொடுத்தோம். எங்களுக்கு ரூ.50,000/–மும், 8 கிராம் தங்கமும் கொடுத்தார்கள். சொந்த பந்தங்கள் கொடுத்து உதவாத காலத்தில் எனது மகளின் திருமணத்திற்கு உதவி செய்த அம்மாவின் அரசிற்கு கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைப் பெண்களின் தாலிக்கு தங்கம் வழங்கி, மக்களின் மனதில் நீங்காமல், மங்கா புகழ்களோடு குடிகொண்டுள்ள அம்மாவின் அரசு மக்கள் நலனுக்காக செயல்பட்டு, மக்களின் பக்கமுள்ள அரசை திருநெல்வேலி மாவட்ட மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

தொகுப்பு

இரா.ஜெயஅருள்பதி,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி